www.Padasalai.Net

www.Trb Tnpsc.Com

வகுப்பு:12 ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இயல்:5

1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம். காரணம் ? அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்ஆ) மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ அனைத்தும்
2) ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரம் அ) மதராசப்பட்டினம் ஆ) காவிரிபூம்பட்டினம் இ) புதுச்சேரி ஈ) கொற்கை
3) தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படுவது அ) திருப்பதி ஆ) சென்னை இ) திருவனந்தபுரம் ஈ) கன்னியாகுமரி
4) ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகம் அ) கன்னிமாரா ஆ) திருவனந்தபுரம்இ) சரசுவதிமகால் ஈ) அண்ணாநூற்றாண்டு நூலகம்
5) 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்ட இடம் அ) எழும்பூர் ஆ) கிண்டி இ) இராயபுரம் ஈ) திருவான்மியூர்
6) ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் அ) இராணிமேரிக் கல்லூரி ஆ) பச்சையப்பன் கல்லூரி இ) சென்னைக் கோட்டைக் கல்லூரி ஈ) கிறித்துவக்கல்லூரி
7) இந்தோ-சாரசனிக் கட்டடப் பாணியில் 1768இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் அ) சேப்பாக்கம் அரண்மனை ஆ) சென்னைப் பல்கலைக்கழகம் இ) ரிப்பன் கட்டடம் ஈ) விக்டோரியா அரங்கு
8) இந்தியாவின் முதல் பொதுநூலகம்அ) சரசுவதிமகால் ஆ) கொல்கத்தா்இ) கன்னிமாரா நூலகம் ஈ) திருவனந்தபுரம்
9) ................. ஆட்சிக்காலத்தைச் சென்னையின் பொற்காலம் என்பர். அ) பிரான்சிஸடே ஆ) எலி யேல்இ) தாமஸ் பிட் ஈ) இராபர்ட் கிளைவ்
10) சென்னை நகராட்சி உருவாக்கப்பட்ட ஆண்டு அ) 1639 ஆ) 1646 இ) 1688 ஈ) 1768
11) கூவம் ஆற்றை .................ஆறு என்றும் அழைத்தனர். அ) வடபழனி ஆ) திருவல்லிக்கேணி இ) மாதவரம் ஈ) பல்லாவரம்
12) பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை .................. காலத்தில் அமைக்கப்பட்டது.அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) முதலாம் நரசிம்மவர்மன்இ) முதலாம் நந்திவர்மன் ஈ) மூன்றாம் நந்திர்வமன்
13) சென்னையில் கிடைத்தவற்றுள் மிகப் பழமையான கல்வெட்டு அ) பல்லாவரம் கல்வெட்டு ஆ) திருவல்லிக்கேணி கல்வெட்டு இ) மயிலாப்பூர் கல்வெட்டு ஈ) மாதவரம் கல்வெட்டு
14) உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் இத்தொடர் உணர்த்தும் பண்பு அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்
15) சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மிக மையத்தை ஏற்படுத்தியவர்அ) வள்ளலார் ஆ) ஞானியாரடிகள்இ) கிருபானந்த அடிகள் ஈ) இவர்களில் எவருமிலர்
16) வள்ளலாரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது அ) வள்ளுவர் கோட்டம் ஆ) கந்த கோட்டம் இ) தில்லை கோட்டம் ஈ) கணபதி
17) தெய்வமணிமாலையின் பாவகை அ) கலி விருத்தம் ஆ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் இ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஈ) பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
18) இராமலிங்க அடிகள் பிறந்த ஊர் அ) மருதூர் ஆ) வடலூர் இ) வல்லம் ஈ) தேரழுந்தூர்
19) திருவருட்பா ................ திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அ) நான்கு ஆ) ஆறு இ) பன்னிரு ஈ) பதினாறு
20) மயிலாப்பூரில் இறைவனுக்குக் கொண்டாடப்படும் விழா அ) பங்குனி உத்திர விழா ஆ)திருக்கார்த்திகை இ) சித்திரா பௌர்ணமி ஈ) தைப்பூச விழா
21) தேவாரம் தந்த திருஞானசம்பந்தர் முத்துப்பல்லக்கில் செல்வது போன்ற காட்சி இடம்பெற்றுள்ள 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் அமைந்துள்ளது அ) மயிலாப்பூர் ஆ) திருநெல்வேலி இ) திருவொற்றியூர் ஈ) வள்ளியூர்
22) திருஞானசம்பந்தரின் பாடல்களைத் தொகுத்தவர் அ) சேக்கிழார் ஆ) இராசராச சோழன்இ) நம்பியாண்டார் நம்பி ஈ) இவர்களில் எவருமிலர்
23) சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்களின் தொகுப்பு பன்னிரு திருமுறைகளில்................ என்று அழைக்கப்படுகின்றன. அ) தேவாரம் ஆ) திருவாசகம்இ) திருச்சதகம் ஈ) திருத்தொண்டத்தொகை
24) "விளியறி ஞமலி" இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
25) தலைக்குளம் என்னும் கதையின் ஆசிரியர் அ) பீர்முகமது ஆ) தோப்பில் முகமது மீரான்இ) அப்துல் ரகுமான் ஈ) ஜெயகாந்தன்
26) தலைக்குளம் என்னும் கதை இடம்பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பு அ) துறைமுகம் ஆ) கூனன் தோப்பு இ) சித்தன்போக்கு ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்
27) தமிழக அரசின் விருது பெற்ற தோப்பில் முகமது மீரான் படைப்புகள் அ) துறைமுகம்,கூனன்தோப்பு ஆ) சாய்வு நாற்காலி ,துறைமுகம் இ) ஒரு குட்டித் தீவின் வரைபடம் ஈ) கூனன்தொப்பு, சாய்வு நாற்காலி
28) படிமம் என்பதன் பொருள்அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
29) காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில் இக்கவிதையில் .............பயின்று வந்துள்ளது. அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
30) எயிற்பட்டினம் உள்ள ஓய்மாநாட்டை ஆட்சி செய்தவன் அ) அதியமான் ஆ) நல்லியகோடன் இ) பேகன் ஈ) நளங்கிள்ள

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com